Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Women's Life in the Literature of the Late Sangam Period: *Thirukkural*

**Thiyakarasa Sindhuja,** Assistant Lecturer, Department of Linguistics (Hindu Civilization), Southeastern University, Sri Lanka.
ORCiD: https://orcid.org/0009-0007-4702-2003
**DOI: 10.5281/zenodo.14744856**

## Abstract

*"Thirukural" is a very special book among the books that guide human life. This book was written in the Late Sangam Period. The author of this book is Thiruvalluvar. The Late Sangam Period is characterized as the moral period between the period of naturalism and the period of devotion. "Thiruukural" is one of the few books that is considered unparalleled in the history of world literature. "Thiruukural" is the main one among the moral books that instruct the basic truths necessary for human society and women's life thoughts. "Thiruukural" is a guide to life that moralizes the human race and a great literature that provides new interpretations every time. "Thirukkural" is the habitat of Tamil culture and the Tamils' way of life. This book was created to include thoughts that elevate a person in life. In this way, "Thirukkural", which is always considered an elixir for the thirst for knowledge, has acquired the literary gift of providing new things to all those who approach it, just as Valla, which gives everything to those who come with valuable wealth, has acquired the literary gift of providing new things to all those who approach it. Although Thiruvalluvar has expressed many thoughts on morality, home, politics, governance, duties, and responsibilities in "Thirukkural", which has various specialities, the problem of the study is to examine how his thoughts on women's lives have been expressed. The main objective of the study is to identify the thoughts on women's lives expressed in "Thirukkural". In particular, women should be respected in society by eliminating social inequalities. When femininity is respected, society will be respected; Valluvar has expressed the idea that women should live without losing their uniqueness in "Thirukkural". Exploring and revealing them are the secondary objectives of the study. This study is qualitative. Primary and secondary data are used as sources of the study. Primary data are source books containing the text of Thirukkural. Secondary data are articles, magazines published on "Thirukkural", and articles containing thoughts related to women.*

**Keywords:** *Thirukkural*, Life, Man, Women, Chastity, Illaram, Women's Discipline, Motherhood.

## References

[1] Karuppathevan. "Valluvan Kanda Arasiyal". *International Tamil Journal*, 2018
[2] Shanmugapriya, Thi. "Thirukuralil Penn Pathivugal". *International Tamil Journal*, 2018.
[3] Puliyurkesigan. *Thirukkural Puthiya urai*. Poompuhar Publishing House. Chennai. 2009.
[4] Munisamy. *Thirukkural Athigara Vilakkam*. Vanathi Pathipagam,1988.
[5] https://www.tamiltypingonline.com Accessed on 12.12.2024.
[6] https://www.thirukkural.net Accessed on 12.12.2024.

**Author Contribution Statement:** NIL

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**Author Acknowledgement:** Nil

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்க மருவிய கால இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் : திருக்குறள்

**தியாகராசா சிந்துஜா,** உதவி விரிவுரையாளர், மொழித்துறை (இந்துநாகரிகம்),
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.
ORCiD: https://orcid.org/0009-0007-4702-2003
**DOI: 10.5281/zenodo.14744856**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த நூலாக திருக்குறள் விளங்குகிறது. இவ் நூலானது சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்றதாகும். இவ் நூலின் ஆசிரியர் திருவள்ளுவர் ஆவார். சங்க மருவிய காலமானது இயற்கைநெறிக் காலத்திற்கும் பக்திநெறிக் காலத்திற்கும் இடைப்பட்ட அறநெறிக்காலம் எனச் சிறப்பிக்கப்படுகிறது. உலக இலக்கிய வரலாற்றில் ஒப்பற்றதாக எண்ணத்தகும் சில நூல்களுள் தலையாய சிறப்பினையுடையது திருக்குறள். மனித சமூகத்திற்குத் தேவையான அடிப்படை உண்மைகள் மற்றும் பெண்கள் வாழ்வியல் சிந்தனைகளை அறிவுறுத்தும் நீதி நூல்களுள் திருக்குறள் பிரதானமானது. மனித இனத்தை நன்னெறிப்படுத்தும் வாழ்வியல் வழிகாட்டியாகவும், காலந்தோறும் புதிய விளக்கம் தந்திடும் பேரிலக்கியமாகவும் திருக்குறள் திகழ்கின்றது. தமிழ்ப் பண்பாட்டின் வாழ்விடமாகவும், தமிழர் தம் வாழ்வியல் நெறியாகவும் திருக்குறள் விளங்குகிறது. வாழ்க்கையில் மனிதனை மேன்மையுறச் செய்யும் சிந்தனைகளை உள்ளடக்கியதாக இந்நூலானது உருவாக்கப்பட்டது. அவ்வகையில் அறிவுப் பசிக்கு என்றும் அமுதமாய் என விளங்கிவரும் திருக்குறள், மதிப்பிடற்கரிய செல்வத்தைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு வந்தோர்க்கு எல்லாம் வாரி வழங்கும் வள்ளலைப் போலத் தன்னை அணுகியவர்களுக்கெல்லாம் புதுப்புதுப் பொருளை வாரி வழங்கும் இலக்கிய வள்ளன்மை பெற்றுத் திகழ்கிறது. இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட திருக்குறளில் திருவள்ளுவர் ஒழுக்கம், இல்லறம், அரசியல், ஆட்சிமுறை, கடமைகள், பொறுப்புகள் என பல சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டபோதிலும் பெண்ணின் வாழ்வியல் பற்றிய சிந்தனைகள் எங்ஙனம் வெளிப்படுத்தப்பட்டள்ளன என்பதை ஆராய்வதே ஆய்வின் பிரச்சனை ஆகும். திருக்குறளில் வெளிப்படுத்தப்படும் பெண்களின் வாழ்வியல் பற்றிய சிந்தனைகளை அடையாளம் காணுதல் ஆய்வின் பிரதானநோக்கமாகும். குறிப்பாக பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமுதாயத்தில் பெண்கள் போற்றப்படவேண்டும். பெண்மைப் போற்றப்படும்போது சமுதாயம் மேன்மையுறும்; பெண் தன்னுடைய தனித்துவத்தை இழக்காது வாழவேண்டும் போன்ற கருத்துகளை வள்ளுவர் திருக்குறளில் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றை ஆராய்ந்து வெளிக்கொணருதல் ஆய்வின் துணை நோக்கங்களாக அமைகின்றது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக அமைகின்றது. ஆய்வின் மூலங்களாக முதன் நிலைத்தரவு, இரண்டாம்*

*நிலைத்தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. முதன்நிலைத்தரவுகளாக திருக்குறள் உரை அடங்கிய மூலநூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகளாக திருக்குறள் குறித்து வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், மேலும், பெண்கள் தொடர்பான சிந்தனைகள் இடம் பெற்ற கட்டுரைகள் போன்றன பயன்படுகின்றன.*

**குறிப்புச்சொற்கள்:** திருக்குறள், வாழ்வியல், மனிதன், பெண்கள், கற்புநெறி, இல்லறம், பெண்ணின் ஒழுக்கம், தாய்மை.

**முன்னுரை**

தமிழில் உள்ள நூல்களில் சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள். இது அடிப்படையில் ஓர் வாழ்வியல் நூலாகும். மனித வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகிய அறம்,பொருள், இன்பம் பற்றி வெளிப்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல் பல வாழ்க்கைத் தத்துவங்களையும் வெளிப்படுத்துகின்ற ஓர் இலக்கியமாக காணப்படுகின்றது. ஓர் சமுதாயத்தில் மற்றும் குடும்பத்தில் பெண்ணானவள் முக்கியமான பங்கை வகிக்கின்றாள். அத்தகைய பெண்ணின் வாழ்வியல் சிந்தனைகளையும் திருக்குறளில் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். அவ்வகையில் திருக்குறளில் வெளிப்படுத்தப்படும் பெண்களின் வாழ்வியல் சிந்தனைகள் பின்வருமாறு நோக்கலாம்.

**கற்புநெறி**

கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது அத்தகைய கற்புநெறி பற்றி வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதாவது கற்புடைய பெண்ணை மனைவியாக பெறுகின்றவனுக்கு அதனைவிட வேறு சிறப்பான செல்வம் கிடையாது என பெண்ணின் கற்புநெறி பற்றி சிறப்பாக விபரிக்கின்றார். இதனை கீழ்வரும் குறட்பா எடுத்துக்காட்டுகின்றது.

**பெண்ணிற்கு பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை யுண்டாகப் பெறின் (குறள்., 54)**

மேலும், ஓர் பெண்ணானவள் கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றித் சிறப்பான முறையில் புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என திருவள்ளுவர் எடுத்தியம்புவதிலிருந்து பெண்களின் வாழ்வியல் சிந்தனை புலப்படுவதனை காணமுடிகின்றது. இதனை கீழ்வரும் குறட்பா எடுத்துக்காட்டுகின்றது.

**தற்காத்துக் தற்கொண்டாள் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலான் பெண் (திருக்குறள் 56)**

**இல்லறம்**

அந்தவகையில் ஒருவருக்கு வாய்க்கும் மனைவி இல்லறத்திற்கு தக்க நல்ல

பண்புடையவளாக இருக்கவேண்டும். தன்னைத் துணையாகக் கொண்ட கணவனுடைய வருவாய்க்கு தக்க வாழ்க்கை நடத்த வேண்டும். அத்தகையவளே நல்வாழ்க்கைத் துணை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனை கீழ்வரும் குறட்பா விபரிக்கின்றது.

**மனைத்தக்க மாண்புடைவள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்., 51)**

இல்லறத்தில் பெண் முக்கியமான ஓர் பங்கை வகிப்பவளாக காணப்படுகின்றாள். இல்லறத்தில் உள்ள பெண் ஒருத்திதன் வீட்டில் உள்ள கணவன், பிள்ளை, விருந்தினர் இவர்களிடம் பரிவுடனும் பணிவுடனும் நடந்துகொள்ள வேண்டும் என திருவள்ளுவர் பெண்ணின் வாழ்வியல் அம்சத்தினை எடுத்துக் காட்டுகின்றார். ஒரு குடும்பம் மாட்சிமையடைவதற்கு மேன்மையடைவதற்கு அந்தக் குடும்பத்தில் ஆடவன் சிறப்பாக அமைய வேண்டும். அல்லது செல்வம் மிகுதியாக இருக்கவேண்டும் என்றால் இவைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், அந்தக் குடும்பத்தின் தலைவி சிறப்பாக மனைமாட்சியை அறிந்தவளாக அமைந்தாலே எல்லாச் சிறப்பும் தாமே அமையும், எக்காலத்திலும் போற்றக்கூடியவளாக, மற்றவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாகாதவளாகப் பெண் திகழவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்ட வள்ளுவர். இதனை,

**மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல் (குறள்.,52)**

என்று குறட்பா மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

மனைவியைப் பெற்றாலே அவன் வாழ்வில் எல்லா நூல்களையும் பெற்றவன் ஆகின்றான் என்றும், பெண்ணின் மாட்சியே இல்லத்தின் மாட்சி என்றும். மனைவியிடத்து இல்லறத்திற்கு வேண்டிய நற்குண நற்செய்கைகள் இல்லையெனில், அவள் எவ்வளவு பெருமையுமையவளாக இருப்பினும் பிறர் மதியார் என்று இல்லறம் சிறப்பாக பெண்கள் கொண்டிருக்கவேண்டிய இயல்புகளை தெளிவாக விளக்குகிறார்.

மேலும் ஓர் இல்லறத்திற்கு தேவையான நற்பண்பு பெண்ணிடம் இல்லாவிட்டால் அவள் எவ்வளவு சிறப்புடையள் ஆயினும் பயனில்லை என்றும் அவள் நற்பண்புகளை உடையவளாக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றார். ஆணின் மொத்த வாழ்க்கைக்கும் துணை என்னும் வகையில் வாழ்க்கைத் துணையாக - இல்லறத்தின் ஆணிவேராகப் பெண் இருக்கிறாள் என்பதால் அவளுக்கு இல்லாள் என்ற பட்டத்தைக் கொடுத்து அவளின் மாட்சியும் வீட்சியுமே இல்லறத்தின் மாட்சியும் வீட்சியும் என்று விரிவாக விளக்குகிறார். இதனை கீழ்வரும் குறட்பா எடுத்துக்காட்டுகின்றது.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென**
**இல்லவள் மனாக்கடை (குறள்., 53)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்று இல்லத்தை ஆட்சிசெய்யும் இல்லவள் மாண்புடையவளாகத் திகழும் பொழுது அந்த இல்லமே மேன்மையடைகிறது. இல்லையெனில், அவ்வில்லறம் பாழாகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். இவ்வாறு மனைவிக்குரிய மாண்பினை எடுத்தியம்புகின்றார். அம்மாண்பு அவளிடத்து இல்லையாயின், அனைத்தும் இருப்பினும் ஏதுமில்லாததாகும் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் கணவனுக்கு மனைவி என்பவள் மிகவும் முக்கியமான துணையாக விளங்குகிறாள். தலைவியுடன் வாழும் வாழ்க்கையைவிடப் பொன்னுலக வாழ்க்கை இனிதாகாது. இக்கருத்தை அறிவுறுத்தும் வகையில்,

**தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு (குறள்., 1103)**

என *திருக்குறள்* விபரிக்கின்றது.

**கணவன் மனைவி உறவு**

ஆரம்பகால சமுதாயத்தில் ஆண்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களாக கருதப்பட்டனர். அவர்களின் கீழே பெண்கள் காணப்படுவதாக கூறுகின்றனர். அதாவது கணவனுக்கு கீழ்ப்படிந்தவளாக காணப்பட்டிருக்கின்றாள். இதனை கீழ்வரும் குறட்பா மூலம் வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றார்.

**பெற்றார் பெறின் பெறுவார் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு (குறள்., 58)**

அதாவது பெண்கள் கணவரைப் போற்றித் தம் கடமைகளை செய்வாரானால் பெருஞ்சிறப்புடைய உலகவாழ்வைப் பெறுவார்கள் எனக் குறிப்பிடுகின்றார். அத்துடன் கடவுளை வழிபடாது கணவனைத் தொழும் பெண்கள் பெய்யென்று கூறினால் மழைகூட பெய்யும் என திருவள்ளுவர் குறிப்பிடுவதிலிருந்து கணவன் மனைவி உறவு வெளிப்படுத்தப்படுகின்றது. இதனைகீழ்வரும் குறட்பாஎடுத்துக்காட்டுகின்றது.

**தெய்வம் தொழாஅள் தொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்., 55)**

**பெண்ணின் ஒழுக்கம்**

அதாவது ஒழுக்கம் என்பது எல்லோருக்கும் அவசியமானது. அவ்வாறான ஒழுக்கம் ஓர் பெண்ணிற்கு எவ்வாறு அமைய வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அந்த வகையில் பெண்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் தன்மை கொண்டவளாக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றார். அவ்வாறு இருக்கின்றமையானது அவர்களை காவலில் காத்துக் கொள்ளும் தன்மையைவிட முதன்மையானது என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை (குறள்., 57)**

மேல்வரும் குறட்பா எடுத்துக்காட்டுகின்றது.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**தாய்மை**

ஒரு பெண்ணிற்கு இல்வாழ்க்கையின் முழுமை என்பது தாய்மை அடைவது ஆகும். அது தொடர்பாகவும் வள்ளுவர் வெளிப்படுத்துவதனைக் காண முடிகின்றது. அதாவது பிள்ளை செல்வங்களைப் பெற்று வாழ்க்கையை பூரணமாக்குதல் வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன்கலம் என்பது நன்மட்கட்பேறு (குறள்., 60)**

மேலும், தாய்மை பற்றி குறிப்பிடுகையில் வள்ளுவர் மிக அழகாக எடுத்தியம்புகின்றார். தன்னுடைய மகன் நற்பண்பு நிறைந்தவன் என பிறர் கூறுகின்றபோது வருகின்ற மகிழ்ச்சி ஆனது அவனை பெற்ற காலத்தில் பெற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதாக மகிழ்வாள் என்று குறிப்பிடுவதிலிருந்து தாய்மையின் சிறப்பை உணர முடிகின்றது. இதனை வள்ளுவர் கீழ்வருமாறு குறட்பா மூலம் விபரிக்கின்றார்.

**ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்., 69)**

**நன்நடத்தையான குழந்தை வளர்ப்பு**

தாய்மை என்கின்ற விடயத்தை நோக்கும் போது வள்ளுவர் சிறப்பாக எடுத்துக்கூறுகின்றார். நல்ல பண்புள்ள ஒழுக்கமுள்ளவளாகவும் வறுமையில் கூட அறத்தை பார்ப்பவராகவும் தீய பழக்கவழக்கங்களை எதிர்க்கும் தாயாகவும் எடுத்துக்காட்டியுள்ளார். இதனை கீழ்வரும் குறட்பாக்கள் எடுத்துக்காட்டுகின்றது.

**ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை (குறள்., 656)**
**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி (குறள்., 923)**
**அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயினும்**
**பிறன்போல நோக்கப் படும் (குறள்., 1047)**

**பெண்ணின் மென்மை**

பெண்கள் மென்மைத்தன்மை உடையவர்கள் என்பது பொதுவான கருத்தாகும் இதனை வள்ளுவரும் எடுத்தியம்புவதைக் காணலாம். இதனை வள்ளுவர் குறிப்பிடுகையில்,

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம் (குறள்., 1120)**

என்று கூறுகின்றார்.

**கல்வி**

மனித இனம் தம்முடைய வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கு கல்வி அவசியமானது. இதனையும் வள்ளுவர் ஆண்,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

பெண் என இருவருக்கும் பொதுவாக விளக்கியுள்ளார். அதாவது நாம் கற்கும் நூல்களை குற்றமில்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற கல்விக்கு தக்கபடி நடக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார். இதனை கீழ்வரும் குறட்பா எடுத்துக்காட்டுகின்றது.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்கு தக (குறள்., 391)**

மேலும், குறிப்பிடுகையில் கணக்கெண்ணுதல், எழுத்தறிவித்தல் ஆகிய இரண்டும் மனிதன் நல்லறிவு அடைவதற்கு வழிகாட்டும் இரு கண்கள் போன்றவை என்ற வாழ்க்கைத் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றார். இதனை கீழ்வரும் குறட்பா எடுத்துரைக்கின்றது.

**எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்என்ப வாழும் உயிர்க்கு (குறள்., 392)**

**விருந்தோம்பல்**

இல்லத்தை ஆளுபவள் இல்லாள். அந்த இல்லாள் முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றினால் தான் அவ்வீட்டில் திருமகள் குடி இருக்கின்றாள் என்று கூறுவதிலிருந்து பெண்ணின் உண்மையான பணிவும் அறமும் வெளிப்படுத்தப்படுகின்றன. இதனை,

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**

**நல்விருந்து ஓம்புலான் இல (குறள்., 84)**

எனக் குறிப்பிடுகின்றார்.

**பெண்ணின் திறன்**

இல்வாழ்க்கை என்ற தவம் சீராக ஒழுகப் பெண் பெருந்துணை ஆகிறாள். அதனால்தான் அவளை இல்லாள் – இல்லத்தை ஆள்பவள் என்றசொல் தந்து இல்லத்தரசி ஆக்குகிறார் வள்ளுவர். பெண்ணானவள் எங்ஙனம் இல்லத்தில் செயல் புரிந்திட, கடமையாற்றிட வேண்டும் என்பதனை,

**தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள்., 56)**

என்ற குறட்பா மூலம் உணர்த்துகிறார். இந்தக் குறளே பெண்ணுரிமைச் சாற்றும் பேறுபெற்ற குறள் என்று கூறின் அதுமிகையாகாது. கற்புநெறி வழுவாது தன்னைக் காத்துக்கொள்ளும் தகுதி உடையவளாகவும், தன் கணவனையும் பாதுகாக்கக்கூடியவளாகவும், பெருமையமைந்த சொல் உண்டாகும்படி இல்லறத்தைக் காப்பாற்றிச் சோர்வின்றி வாழ்பவளே சிறந்தபெண். இத்தகைய பெருமையைப் பெண்ணுக்குத் தந்திருக்கிறார் வள்ளுவர்.

**பெண்கள் போற்றும் அறம்**

அன்பும் அறனும் கொண்டு இல்லறத்தில் மக்கள் வாழவேண்டும். ஏனெனில், அன்பு பகையை முறிக்கும்; நட்பை வளர்க்கும்; நல்லுறவு ஏற்பட வழிவகுக்கும். அறம் செய்வதற்கு

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



அடிப்படையாக மனத்தூய்மை விளங்கும். மேலும், அறம் செய்துவாழ்வது மற்றவர்கள் பழிக்கும் மாசில்லாத தன்மையுடையதாக விளங்க வேண்டும் என்பதைதிருவள்ளுவர்,

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (குறள்., 49)**

என்று பெண்களைப் போற்றும் அறத்தினை விளக்குகின்றார். மேலும் இல்வாழ்வின் பண்பு அன்பு செலுத்துவது. அதன் பயன் அறம் செய்வது என்பதனை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள்.,45)**

என்ற குறட்பாவின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இவைதனை தொகுத்து நோக்கும்போது *திருக்குறள்* மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற அறநூலாகவும் நல்ல கருத்துக்களை புகட்டுவதற்காக தோன்றினாலும் பெண்கள் சமுதாயத்தில் பின்பற்றும் நல்ல பண்புகளை எடுத்துரைப்பதில் தவறவில்லை. அவற்றையும் சிறப்பாக விளக்கியுள்ளமையை காண முடிகின்றது. திருவள்ளுவர் பெண்ணை அன்புடையவளாக அறிவுடையவளாக, அறப்பண்புகளை பின்பற்றுபவளாக, நல்ல இல்லத்தரசியாக, நல்ல துணையாளாக, தயாக, கற்புள்ளவளாக என பல்வேறு வாழ்வியல் அம்சங்களின் அடிப்படையில் விளக்கியுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

**குறிப்புகள்**

[1] கருப்பத்தேவன்."வள்ளுவன் கண்ட அரசியல்." *சர்வதேச தமிழ் ஆய்விதழ்.*

[2] சண்முகப்பிரியா,தீ. "திருக்குறளில் பெண் பதிவுகள்." *பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்.* 2018.

[3] புலியூர்க்கேசிகன். *திருக்குறள் புதியஉரை.* பூம்புகார் பதிப்பகம். சென்னை. 2009.

[4] முனிசாமி. *திருக்குறள் அதிகாரவிளக்கம்.* வானதிபதிப்பகம்.1988.

[5] https://www.tamiltypingonline.com 12.12.2024 அன்று அணுகப்பட்டது.

[6] https://www.thirukkural.net 12.12.2024 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.